திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை – 08.03.2026

# அன்பின் ஆழம்..!

புறநகர் பகுதியில் அமைந்திருந்த அந்த ஆதரவற்றோர் மற்றும் முதியோர் இல்லத்தின் முன் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கி வந்த அந்த மகனின் பின்னால் மெதுவாக நடந்து வந்தார் அவனுடைய தந்தை. நடையில் இருந்த தளர்வு அவருடைய வயோதிகத்தைக் காட்டினாலும், அவரின் கண்களில் அன்பின் ஒளி பிரகாசித்தது.

இந்த ஆதரவற்றோர் மற்றும் முதியோர் இல்லம் இவர்களுக்கு ஒன்றும் புதிய இடம் அல்ல. ஏனென்றால் இவர்கள் தங்களுடைய குடும்ப விழாக்களின் போது பல முறை இங்கு வந்தது உண்டு. அதுமட்டுமல்லாமல் இந்த இல்லத்தின் உரிமையாளரும் வந்திருக்கும் முதியவரும் சிறுவயது நண்பர்கள். பின்னர் அவர் வெளிநாட்டில் இருந்துகொண்டு இந்த இல்லத்தை நடத்தி வருகிறார். அவ்வப்போது நேரில் வந்து பார்த்துச் செல்வார்.

தந்தையின் முகத்தை நேருக்கு நேர் பார்க்கும் அந்த பழைய துணிவு இல்லாதவனாய் தலையைக் குனிந்து கொண்டே “அப்பா, உள்ளே வாங்க...” என்றான் மகன் .

முகத்தில் எந்த சலனமும் இல்லாதவராய் தன் மகனைப் பார்த்த தந்தை, “ இந்த இடம் நல்லா இருக்கும்னு நெனைக்குறேன் ” என்று மெதுவாக சொன்னார் தன் மகனிடம்.

மகன் பதில் சொல்லவில்லை. அவனுடைய மனதில் ஒரே சிந்தனை, குடும்ப சண்டைகள்.. பொருளாதார சிக்கல்கள்... தன் அப்பாவைப் பற்றி மனைவி தினமும் சொல்லும் வார்த்தைகள்.. இவை எல்லாம் சேர்ந்து ஒருவித அழுத்தத்தின் காரணமாக மகன் இன்று இந்த முடிவை எடுத்துவிட்டான்.

அந்த இல்லத்தின் மேலாளர் அறையில் அமர்ந்து அங்கு இருக்கும் வசதிகள் முதலானவற்றை பற்றி விசாரித்து, தன் தந்தையை அங்கே சேர்ப்பதற்கு உரிய படிவங்களை நிரப்பிக் கொண்டு இருந்தான் மகன்.

தன் செல்போன் சத்தம் கேட்டு எடுத்து பார்த்தான் மகன். அழைப்பில் தன் மனைவி.. உடனே செல்போனை எடுத்துக்கொண்டு அந்த அறையை விட்டு சற்று தூரம் வெளியே வந்து பேசினான்.

அப்பொழுதும் மனைவியின் சொற்கள் தன்னையும் தன் தந்தையையும் மேலும் காயப்படுத்துவதை உணர்ந்த மகன் கண்ணீரோடு செல்போனை வைத்துவிட்டு, இந்த இல்லத்தில் தன் தந்தையை சேர்க்க வேண்டும் என்று தீர்க்கமாக முடிவெடுத்து திரும்பும் போது எதிர்பாராதவிதமாக வெளிநாட்டில் இருந்த அந்த இல்லத்தின் உரிமையாளர் அங்கு வந்து கொண்டு இருந்தார்.

இருவரும் நலம் விசாரித்த பிறகு தான் வந்த காரணத்தை மகன் இல்லத்தின் உரிமையாளரிடம் சொன்னான். ஒரு நிமிடம் யோசித்த உரிமையாளர், “ அப்படியா...பரவாயில்லை... உன் அப்பாவை நாங்கள் நன்றாக பார்த்துக் கொள்கிறோம். நீ கவலை கொள்ளாதே..” என்றார்.

ஒரு சிறிய அமைதிக்குப் பிறகு அந்த இல்லத்தின் உரிமையாளர், " தம்பி... உன்னிடம் ஒரு விஷயத்தை நான் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறன். சொல்லலாமா?" என்று கேட்டார்.
"எதைப்பற்றி?" என்று மகன் கேட்க ...
"உன்னைப்பற்றிதான் தம்பி. உன்னைப்பற்றி உன் தந்தை உன்னிடம் ஏதாவது சொல்லி இருக்கிறாரா? " என்று கேட்டார் உரிமையாளர்.

"ஒன்றும் சொன்னதில்லையே" என்றான் மகன்.

"பல வருடங்களுக்கு முன்பு நான் நடத்தும் இந்த ஆதரவற்றோர் இல்லத்தில் இருந்துதான், உன் தந்தை ஒரு அனாதை குழந்தையைத் தத்தெடுத்தார். மிகுந்த அன்போடு அந்த குழந்தையை வளர்த்தார். நல்ல கல்வி கொடுத்து , தன் சொத்துகள் எல்லாவற்றையும் அந்தக் குழந்தையின் பேரில் எழுதி வைத்து , அந்தக் குழந்தையின் மகிழ்ச்சியில் தான் மகிழ்ந்து , அந்தக் குழந்தைதான் தன்னுடைய உலகம் என்று வாழ்ந்து வந்தார். அந்தக் குழந்தை யார் என்று தெரியுமா?" என்று கேட்டார் உரிமையாளர்.

குழப்பத்தோடு நின்று கொண்டு இருந்த மகனைப் பார்த்து ,

"அந்தக் குழந்தையே நீ தானப்பா." என்றார் உரிமையாளர்.

சில வினாடிகள் உலகமே இருண்டது போல் இருந்தது மகனுக்கு. சுய நினைவு வந்தவனாய் தன்னை உணர்ந்த போது, மகனின் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டுகிறது.

உரிமையாளர் சொன்னார், " அன்று.. அவர், உன்னை எங்களிடம் இருந்து பெற்றுச்சென்றார். இன்று.. நீ, அவரையே எங்களிடம் விட்டுச் செல்கிறாய். பாராவயில்லை ... நாங்கள் அவரை நன்றாகப் பார்த்துக் கொள்கிறோம். " என்று அவர் சொல்லி முடிப்பதற்குள் மகன் வேகமாக மேலாளர் அறையை நோக்கி ஓட்டினான்.
அங்கு இந்த இல்லத்தில் தன் அப்பாவைச் சேர்ப்பதற்காக தான் எழுதிக்கொண்டு இருந்த படிவங்களை எல்லாம் கிழித்து குப்பையில் போட்டுவிட்டு தன் தந்தையின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு ," வாங்க அப்பா.. நம்ம வீட்டுக்குப் போகலாம் .." என்று தன் தந்தையை அழைத்துக்கொண்டு காரை நோக்கிப் புறப்பட்ட இவர்கள் இருவரையும் மகிழ்ச்சியோடு பார்த்து நின்றார் அந்த இல்லத்தின் உரிமையாளர்.